Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.204/2019 PW-4**

Name : நித்யா
Father / Husband name : சுரேஷ்
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 30.12.2024

**Accused Absent. Petition u/s 317 CrPC filed and allowed.**

<u>**முதல் விசாரணை**</u>

நான் சென்னையில் வசிக்கிறேன். நான் வீட்டுக்குடுத்தினம் தான். சாட்சி சந்தீப்குமார் என்பவரை எனக்கு தெரியாது. சாட்சி முரளி எனது காரின் ஓட்டுநர். சாட்சி சுரேஷ் எனது கணவர். சாட்சி பாக்கியராஜ் என்பவர் எனது உறவினர். கடந்த 30.04.2018 ம் தேதி நானும் எனது கணவர் சுரேஷ், உறவினர் பாக்கியராஜ் ஆகியோர் ஓட்டுநர் முரளிக்கு சொந்தமான TN 85 D 1890 பதிவு எண் கொண்ட மாருதி காரில் திருவண்ணாமலை கோவிலுக்கு கிரிவலம் சென்றுவிட்டு மீண்டும் சென்னை செல்வதற்காக வந்துகொண்டிருந்தோம். நாங்கள் விடியற்காலை கூச்சிக்கொளத்தூர் என்ற ஊரிலுள்ள பெட்ரோல் பங்கின் அருகே நான் பயணித்த கார் வேகமாக வந்தது என்று சொல்லி எங்களுக்கு பின்னால் வந்த கார் எங்களுக்கு முன்னால் வந்து காரை ஓரமாக நிறுத்தும் படி சொன்னார்கள். நாங்கள் காரை ஓரமாக நிறுத்தியவுடன் ஏன் வேகமாக செல்கிறீர்கள் என்று அந்த காரில் இருந்த வெங்கடேஷ் சைதன்யா ஆகியோர்கள் அவர்கள் பயணித்த வாகனத்தை எங்கள் காருக்கு 50 மீ தொலைவில் நிறுத்திவிட்டு எங்கள் ஓட்டுநரிடம் கேட்டார்கள். எங்கள் காரின் ஓட்டுநர் நாங்கள் மெதுவாக தான் செல்கிறோம் என்று சொன்னார். அப்போது திருச்சியிலிருந்து சென்னையை நோக்கி ஒரு வேன் வேகமாக வந்து இடது ஓரமாக நிறுத்தியிருந்த எங்கள் காரை பின்பக்கமாக இடித்ததில் எங்கள் கார் 10 அடி தள்ளி ஒரு பள்ளத்தில் கவிழ்ந்துவிட்டது. எங்கள் காரை இடித்துவிட்டு அந்த வேன் அங்கிருந்து வெங்கடேஷ் , சைதன்யா ஆகியோர்கள் மீது மோதிவிட்டு அவர்கள் நிறுத்தியிருந்த காரின் மீது மோதி பின்னர் அந்த வேன் நடுரோட்டில் கவிழந்துவிட்டது. அந்த விபத்தில் எனக்கு நெஞ்சில்

அடிப்பட்டது. எங்கள் காரின் ஓட்டுநருக்கும் அடிப்பட்டது. எனது கணவர் மற்றும் உறவினருக்கு லேசான காயம் ஏற்பட்டது. வெங்கடேசும், சைதன்யாவும் அங்கேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். அந்த விபத்தை ஏற்படுத்திய ஓட்டுநரின் பெயர் ஜெகன் என்று சொன்னார். பின்னர் அடிப்பட்ட நாங்கள் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்துவிட்டோம். திண்டிவனம் காவல் நிலையத்திலிருந்து போலிசார் வந்து எங்களை விசாத்தார்கள். விபத்தை ஏற்படுத்திய ஓட்டுநர் ஜெகனை நான் பார்க்கவில்லை

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

காரில் சென்ற 4 பேரும் கிரிவலம் சென்று திரும்பி வீட்டிற்கு வந்தோம். திருவண்ணாமலை கிரிவலம் என்றால் 14 கி.மீ. நடந்து சுற்றவேண்டும் என்றால் சரிதான். நாங்கள் எந்த தேதியில் கிரிவலம் முடித்து புறப்பட்டோம் என்றால் நள்ளிரவு 1.30 - 2.00 மணியிருக்கும். இறந்தவரின் பெயர்கள் எனக்கு எப்படி தெரியும் என்றால் விபத்த நடந்த மறுநாள் எனது காரின் ஓட்டுநர் சொன்னார். வேனை ஓட்டி வந்தது ஜெகன் என்று போலிசார் தான் சொன்னார் என்றால் சரிதான். பெட்ரோல் பங்க் அருகே நாங்கள் கார் நிறுத்திய இடமானது காரை நிறுத்துவதற்கான இடமோ, லேபையோ இல்லை என்றால் சரிதான். அடிப்பட்ட பிறகு அருகில் இருக்கும் காவல் நிலையம் சென்று புகார் எதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. விபத்து நடந்ததாக சொல்லும் சாலையில் அதிகமான வாகனங்கள் சென்றுகொண்டுதான் இருக்கும் என்றால் எனக்கு அடிப்பட்டவுடன் மயக்கம் வந்ததால் என்னை ஆம்புலன்சில் அழைத்து சென்றுவிட்டார்கள், அதனால் எனக்கு தெரியாது. திருவண்ணாமலை கிரிவலம் சென்றுவிட்டு நாங்கள் ஓய்வு எடுக்காமல் வந்தோம் என்றால் எங்களது காரின் ஓட்டுநர் கிரிவலம் வரவில்லை, அவர் காரிலே தான் இருந்தார், நாங்கள் மூவரும் தான் கிரிவலம் சுற்றினோம். இதற்கு முன் 4 பேர் சுற்றியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் டிரைவர் முழுவதுமாக சுற்றினாரா அல்லது பாதியில்

நின்றுவிட்டாரா என்று எனக்கு தெரியவில்லை. எங்களது டிரைவர் காரை வேகமாக ஓட்டிவந்ததால் பின்னால் வந்த கார் எங்கள் காரை நிறுத்தசொன்னதால் எங்கள் கார் ஓட்டுநர் நடுரோட்டில் காரை நிறுத்திவிட்டோம், வேறு ஒரு வாகனம் வந்து இடித்ததை அதன் நெம்பர் தெரியாததால் இந்த வேனின் ஓட்டுநர் இடித்ததாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1, திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.204/2019 PW-5**

Name : சுரேஷ்
Father / Husband name : அரவாண்டி
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 30.12.2024

Accused Absent. Petition u/s 317 CrPC filed and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் வசிக்கிறேன். நான் ஆர்டுவர்சில் வேலை செய்கிறேன். சாட்சி நித்யா எனது மனைவி. சாட்சி முரளி எனது காரின் ஓட்டுநர். சாட்சி பாக்கியராஜ் எனது தம்பி. கடந்த 30.04.2018 ம் தேதியன்று நானும் எனது மனைவி, தம்பி, முரளி ஆகியோர்கள் முரளிக்கு சொந்தமான TN 85 D 1890 பதிவு எண் கொண்ட ஸ்விப்ட் காரில் முரளி ஓட்ட நாங்கள் திருவண்ணாமலை கிரிவலத்திற்கு சென்றுவிட்டு மீண்டும் சென்னைக்கு செல்வதற்காக திண்டிவனம் தாண்டி ஒரு பெட்ரோல் பங்க் அருகே அதிகாலை 3 மணியளவில் வந்தபோது எங்களுக்கு பின்னால் வந்த இஸ்சூஸ் வாகனம் எங்களுக்கு முன்னால் வந்து எங்கள் வாகனத்தை ஓரமாக நிறுத்தும்படி கையை காட்டினார்கள். அவர்களும் அவர்கள் வாகனத்தை நிறுத்திவிட்டு நிறுத்தப்பட்ட எங்கள் காரை நோக்கி இரண்டு நபர்கள் வந்து எனது ஓட்டுநரிடம் ஏன் வேகமாக வந்தீர்கள் என்று கேட்டார்கள். டிரைவர் காரினுள்ளே இருந்து அவர்களுக்கு பதில் சொன்னார். நாங்கள் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோதே பின்னால் சத்தம் கேட்டது. நாங்கள் என்ன என்று பார்த்தபோது TN 18 AA 2688 பதிவு எண் கொண்ட மகேந்திரா வாகனம் எங்கள் காருக்கு பின்னால் இடித்து எங்களிடம் பேசிக்கொண்டிருந்த அந்த இரண்டுபேரின் மீதும் மோதி அவர்கள் வந்த காரின் மீதும் மோதிவிட்டு அந்த வேன் கவிழ்ந்துவிட்டது. நாங்கள் வந்த கார் விபத்தில் கவிழ்ந்துவிட்டது. காரின் கண்ணாடியை உடைத்துக்கொண்டு தான் நாங்கள் வெளியில் வந்தோம். எனது மனைவிக்கு மட்டும் அடிப்பட்டது. மற்ற மூன்று பேருக்கும் லேசாக அடிப்பட்டது. எங்களிடம் பேசிக்கொண்டிருந்த இரண்டு பேரும் அங்கேயே இறந்துவிட்டார்கள்.

அதன்பின்னர் ஆம்புலன்ஸ் வந்து திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டோம். அந்த வேனை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியவரின் பெயர் ஜெகன், அவரை நான் பார்க்கவில்லை. போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

திண்டிவனம் அரசு மருத்துவமனையில் என்னிடம் எந்த போலிசார் வந்து விசாரித்ததார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வேனை ஓட்டிவந்தவரின் பெயர் ஜெகன் என்று போலிசார் சொல்லி தான் தெரியும் என்றால் இல்லை, எனது ஓட்டுநர் முரளி சொன்னார். நாங்கள் காரில் சென்ற 4 பேரும் கிரிவலம் சுற்றினோம் என்றால் இல்லை, ஓட்டுநர் வரவில்லை, அவர் காரில் தான் இருந்தார், நாங்கள் தான் சுற்றினோம். எங்களது காரை தடுத்த சண்டைபோட்டவர்கள் நாங்கள் ஏன் வேகமாக வந்தோம் என்று சண்டை போட்டார்கள் என்றால் சண்டை தான் போட்டார்கள். அப்போது தீடிரென சத்தம் மட்டும் தான் கேட்டது என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் இருந்தபோது எங்கள் ஓட்டுநர் முரளி தான் வாகனத்தின் எண் மற்றும் அவரின் பெயர் அனைத்தும் சொன்னார் என்றால் மருத்துவமனையில் கூறவில்லை, அதன்பிறகு வீட்டில் சொன்னார். எனது மனைவிக்கு அடிப்பட்டது சம்மந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லும் இடம் போக்குவரத்து மிகுந்த இடம் தான் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் அந்த வழியாக சென்றவர்கள் வந்து பார்த்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் 100 பேர் இருப்பார்கள் என்றால் சரிதான். பெட்ரோல் பங்க் அருகில் வாகனம் நிறுத்துவதற்கு இடமோ, சர்வீஸ் ரோடு இல்லை என்றால் சரிதான். நாங்கள் சென்ற வாகனத்தின் ஓட்டுநர் தான் காரை வேகமாக ஓட்டினார், அவர்கள் நிறுத்த சொன்னதால் வாகனத்தை நடுரோட்டில் நிறுத்திவிட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு திடீரென்று வாகனத்தை நிறுத்திவிட்டதால்

விபத்து ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. விபத்து குறித்து எனக்கு சரியான விவரம் தெரிந்திருந்தால் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்திருப்பேன், தெரியாததால் தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மனைவி இழப்பீடு கேட்டு மனுதாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்தில் இறந்தவர்களுக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக அவர்களின் உறவினர்கள் கேட்டுக்கொண்டால் நடக்காத சம்பவத்திற்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1, திண்டிவனம்.